கருணாநிதி அறிவித்தது சோசலிச பட்ஜெட்

அப்துல் லத்தீப் கருத்து

சென்னை, ஜூலை 19-

"முதல்-அமைச்சர் கருணாநிதி தாக்கல் செய்துள்ள பட்ஜெட் சோசலிச பட்ஜெட் ஆகும்" என்று அப்துல் லத்தீப் கூறி உள்ளார்.

எம்.அப்துல் லத்தீப்

தமிழக பட்ஜெட் பற்றி இந்திய தேசிய லீக் கட்சியின் தமிழ்மாநில தலைவரும், தமிழக சட்டமன்ற கட்சி தலைவருமான எம்.அப்துல் லத்தீப் கூறியதாவது:-

பொருளாதாரத்தின் அனைத்து நுணுக்கங்களையும் ஆழமாக ஆய்வு செய்து எல்லா தரப்பு மக்களும பயன் அடையும் வகையிலும் இன்றுள்ள பணவீக்கத்தையும், விலை ஏற்றத்தையும் கட்டுப்படுத்தும் வகையில் கலைஞர் இந்த நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்து இருப்பது மகிழ்ச்சிக்குரியதும், பாராட்டுக்குரியதும் ஆகும்.

முக்கியமான அத்தியாவசிய பொருள்கள் மீது இன்றுள்ள வரி அளவை குறைத்தும் பலவற்றுக்கு வரிகளை அகற்றியும் இருப்பது மன நிறைவை அளிக்கிறது.

இருப்போரிடம் பெற்று இல்லாதோருக்கு வழங்கும் ஒரு சோசலிச பட்ஜெட்டாகும் இது.

இவ்வாறு அப்துல் லத்தீப் கூறி உள்ளார்.

ஜனதா தளம்

தமிழ்நாடு ஜனதா தளம் சார்பில் அதன் தலைவர் ஜி.ஏ. வடிவேலு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் " தமிழக முதல்-அமைச்சர் கலைஞர் சமர்ப்பித்துள்ள பட்ஜெட் பாராட்டுக்குரியது. இது அவருடைய முதிர்ந்த அனுபவத்தையும், தமிழ் மக்கள் மீது: கொண்டுள்ள பாச உணர்வையும் காட்டுகிறது. இந்த சிறந்த பட்ஜெட்டை அறிமுகம் செய்த முதல்- அமைச்சருக்கும் தமிழக அரசுக்கும் ஜனதா தளம் சார்பில் பாராட்டை தெரிவிக்கிறேன்" என்று குறிப்பிட்டு உள்ளார்.

பண்ருட்டி ராமச்சந்திரன்

மக்கள் நல உரிமைக் கழக பொதுச் செயலாளர் பண்ருட்டி ராமச்சந்திரன் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் "தமிழக முதல்வர் அளித்துள்ள வரவு- செலவு திட்டம் பொதுவாக எல்லோரும் வரவேற்கக் கூடியது. சிறப்பாக ஏழைகளின் இதயங்களை ஈர்க்கக் கூடியது. இந்த பட்ஜெட்டை 'மணமில்லாத காகிதப்பூ' என்பது நுகரும் சக்தி இழந்த மூக்கடைப்புக் காரர்களின் கூற்றேயாகும். பற்றாக்குறை இருந்தும் இவ்வளவு சலுகையா என்று வியப்போருக்கு, பத்தாவது நிதிக் கமிஷன் மூலம் நிதி பெறுவதற்கு டாக்டர் கலைஞர் வகுத்த வியூகம் என்பது ஏன் புரியவில்லையோ?" என்று குறிப்பிட்டு உள்ளார்.

கி.வீரமணி

தி.க. பொதுச் செயலாளர் கி.வீரமணி, தமிழக அரசு பட்ஜெட் குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் "ஒட்டு மொத்தமாக இந்த வரவு-செலவு திட்டம் சிறப்பான வரவேற்கக் கூடிய, பலதரப்பட்டவர்களும் மகிழக் கூடிய திட்டம் தான். தமிழக முதல்வருக்கும், அரசுக்கும் நமது பாராட்டுக்கள்" என்று குறிப்பிட்டு உள்ளார்.

ம.தி.மு.க.

ம.தி.மு.க. பொருளாளர் கண்ணப்பன் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், "ஏழை-எளிய மக்களின் வேதனையாம் வெப்பம் குறைக்க இந்த நிதி நிலை அறிக்கை பனை ஓலை விசிறிக் காலத்துக்கு ஏற்றதாக இருக்கிறதே தவிர,'கம்ப்யூட்டர் யுகத்துக்கு ஏற்றதாக இல்லை' என்று குறிப்பிட்டு உள்ளார்.

பாரதீய ஜனதா

பாரதீய ஜனதா கட்சியின் தமிழ் மாநில பொதுச் செயலாளர் மைத்ரேயன் வெளியிட்டுள்ள அறிக்கையில் "தமிழக அரசு பட்ஜெட் ஒரு பொலிவற்ற உப்பு சப்பில்லாத பட்ஜெட் ஆகும்" என்று கூறி உள்ளார்.

பள்ளி நிர்வாகிகள்

தமிழ்நாடு பள்ளி நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டுப் பேரவை பொதுச் செயலாளர் திருஞான சம்பந்தன் விடுத்துள்ள அறிக்கையில் "தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை வரவேற்புக்கும் பாராட்டுக்கும் உரியது ஆகும்" என்று குறிப்பிட்டு உள்ளார்.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி பொதுச் செயலாளர் கே.என். ராசு வெளியிட்டு உள்ள ஒரு அறிக்கையில் "அரசு பொறுப்பேற்றவுடன் ஊழியர் நலன் மற்றும் கல்வி நலனில் அக்கறை கொண்டு உரிய அறிவிப்பினை அளித்து நிதி ஒதுக்கீடு செய்திருப்பது பாராட்டுக்குரியது. ஆசிரியப் பணியிடங்கள் நிரப்புவது குறித்து உரிய அறிவிப்புகளை அரசு வெளியிடவேண்டும்" என்று குறிப்பிட்டு உள்ளார்.

தலைமை செயலக தட்டச்சர்கள்

தமிழ்நாடு தலைமைச் செயலக தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர்கள் சங்கம் சார்பில் தலைவர் சுந்தர் செயலாளர் மோகன்தாஸ் ஆகியோர் கூட்டாக ஒரு அறிக்கை வெளியிட்டு உள்ளனர்.

அந்த அறிக்கையில் "தமிழக முதல்-அமைச்சர் கலைஞர் தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கையில், அரசு ஊழியர்கள் கொண்டுள்ள அதிகப்படியான அபிலாசைகள், கோரிக்கைகள் அனைத்தும் உணர்ந்து அவை செயல்படுத்த எடுத்துக் கொண்ட முயற்சி உண்மையிலேயே பாராட்டத் தக்கதாகும். அரசு ஊழியர்கள், பென்ஷன் தாரர்கள், பொதுமக்கள் அனைவரது உள்ளம் குளிரும் வகையில் தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையாக இச்சங்கம் கருதி தமிழக அரசை மிகவும் பாராட்டுகிறது" என்று குறிப்பிட்டு உள்ளனர்.

ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி

தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி பொதுச் செயலாளர் அப்துல் மஜீத் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் "மாநிலத்தின் அனைத்து தரப்பினருக்கும் திருப்தி அளிக்கும் வகையில் நிதிநிலை அறிக்கையினைத்தந்துள்ள முதல்வர் கலைஞர், ஆசிரியர் - அரசு ஊழியர்களுக்கு புதிய சலுகைகளையும் திட்டங்களையும் அறிவித்து இருப்பதன் மூலம், ஏற்கனவே அவர் நிகழ்த்திய வரலாற்று சாதனைகளை அவரே விஞ்சி நிற்கின்ற சாதனைச் செல்வராக விளங்குகிறார்" என்று குறிப்பிட்டு உள்ளார்.

தமிழ்நாடு மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்க பொது செயலாளர் சி.ரத்தின சபாபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் "கலைஞரின் நிதிநிலை அறிக்கையில் ஏழை எளிய மக்களுக்கும், வணிக பெருமக்களுக்கும், குறிப்பாக அரசு அலுவலர்களுக்கும், ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்கும் மிகப்பெரிய சலுகைகளை முதல்- அமைச்சர் வழங்கி இருக்கிறார். எனவே தமிழக மின் வாரிய தொழிலாளர் சார்பில் பாராட்டி நன்றி தெரிவிக்கிறோம்" என்று கூறியுள்ளார்.